**மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டத்தி - 2020**

மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 19 ஆம் திகதிய 0486-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் லங்கா எலெக்ரிசிற்றி கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராகவும் உள்ளன. மேல் மாகாணத்திலுள்ள புதுப்பிக்கத்தக்க சக்தி நுண் மின்சார விநியோக முறைமையொன்றை நிர்மாணிப்பதனூடாக கலப்பின புதுப்பிக்கத்தக்க சக்தி முறைமைகளை ஸ்தாபிப்பதற்கு உதவியளித்தல் செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். புதுப்பிக்கத்தக்க சக்தி நுண் மின்சார விநியோக முறைமையை ஸ்தாபித்தல் எனும் பெயரிலான கூறின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. மானிய உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 268.36 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 1.8 மில்லியனானதுடன் இது ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூன் 29 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றுக்களையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்

| இல. | கூறு | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | வேலைகள் மற்றும் மதியுரை சேவைகள் | மொத்த மானிய பெறுகைகளில் ஐ.அ.டொலர் 1.5 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 0.3 மில்லியன் தொகைகள் முறையே வேலைகள் கூறு மற்றும் மதியுரை சேவைகளிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. மானிய உடன்படிக்கையின் பிரகாரம் மானிய முடிவுத் திகதி 2022 மார்ச் 31 ஆக இருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலைகள் கூறிற்காக ஐ.அ.டொலர் 0.159 மில்லியன் அல்லது 11 சதவீதம் மற்றும் மதியுரை சேவைகளிற்காக ஐ.அ.டொலர் 0.109 மில்லியன் அல்லது 37 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தன. | 2021.02.10 இல் பெறப்பட்ட ஏடிபீ இடமிருந்தான உறுதிப்படுத்தல் கடிதத்துடன் LC செயற்பாட்டிற்கு வந்த பின்னரே நிர்மாண வேலைகளிற்கான மானிய பணவளிப்புக்கள் தொடங்கப்பட்டது. | பட்டியலிடப்பட்ட கால எல்லையினுள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்யும் பொருட்டு செயற்திட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நுண் மின்சார விநியோக அமைப்பு மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆய்வுகூடத்தை நிறுவுதல் | புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நுண் மின்சார விநியோக முறைமையினை வடிவமைத்து, வழங்கி, நிறுவுவதற்கான ஒப்பந்தம் 2020 பெப்ரவரி 11 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த உடன்படிக்கை 2020 யூலை 03 இல் கைச்சாத்திடப்பட்டிருந்தது. செயற்திட்ட பட்டியலின் பிரகாரம் 2021 நவம்பர் 30 அளவில் நுண் மின்சார விநியோக அமைப்பை நிறுவுதல் தொடர்பான செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரர் இணங்கியிருந்த போதிலும் சாத்தியமான டிசீ கேபிளை நிறுவும் பாதைகளை கண்டறிதல், பற்றரி கொள்கலனிற்கு சாத்தியமான இடம் மற்றும் டீசல் உற்பத்தியை நிறுவுதல் போன்ற ஆரம்ப | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் சேவைகளிற்காக எதிர்பார்க்கப்படும் பூர்த்தி செய்தல் திகதி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட கால அளவுடன் செயற்பாட்டிற்கான திகதியாகக் கணக்கிடப்பட வேண்டும்.<br>ஒப்பந்ததாரருக்கு LC வழங்கப்பட்டதும் செயற்பாட்டு திகதி கணக்கிடப்படுகின்றது. ADB உறுதிமொழி கடிதத்தை வழங்கியதும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட LC க்கள் மாத்திரமே செயற்பாட்டில் உள்ளன. ADB உறுதிப்படுத்தல் கடிதத்தை 2021.02.09 மற்றும் 2021.0210 இல் மாத்திரமே வழங்கியிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் செயற்திட்ட காலப்பகுதியினுள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்யும் பொருட்டு ஒப்பந்ததாரர்களின் நடவடிக்கைகள் தொடர்பாக நெருங்கிய மேற்பார்வை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | |
|---|---|
| நடவடிக்கைகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. செயற்திட்டத்தின் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு 05 மாதங்கள் மாத்திரமே எஞ்சியுள்ள போதிலும் கணக்காய்வுத் திகதி வரையிலும் தேவையான பொறிகள் மற்றும் இயந்திரங்களின் இறக்குமதி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆகையால் நடைமுறைக்கு வரும் திகதி 2021.02.10 ஆக இருக்க வேண்டியதுடன் அந்த திகதிக்குப் பின்னர்தான் LCக்கள் திறக்கப்பட முடியும். குறித்த சில உபகரணங்கள் வழங்குவதில் தாமதங்கள் குறிப்பிடப்பட்டு ஒப்பந்ததாரரிடமிருந்து தெளிவுபடுத்தல்கள் கோரப்பட்டுள்ளன. |

## 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நுண் மின்சார விநியோக அமைப்பு ஆரம்ப செயற்திட்டத்தை வடிவமைத்து, நிர்மாணித்து, நிறுவி, வேலையை ஆரம்பிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் நுண் மின்சார விநியோக முறைமையை செயற்படுத்தும் இரண்டு ஆண்டுகளிற்கு தேவையான உதிரிப்பாகங்களிற்காக விலைமனுக்களை சமர்ப்பித்திருக்கவில்லை. எனினும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு முன்னர் மேற்படி விலைமனு பொருட்களிற்குரிய இணங்கக்கூடிய தீர்ப்பிற்கு உட்பட்டு கேள்வியை பரிந்துரைத்திருந்தது. பின்னர் விலைமனுக்களை சமர்ப்பித்திருந்த ஏனைய கட்டாய உதிரிப்பாகங்களிற்காக இரண்டு ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் ஒப்பந்ததாரர் உத்தரவாதங்களை வழங்கியிருந்ததால் 2020 பெப்ரவரி 11 இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் ஒப்பந்ததாரருடன் நடாத்தப்பட்ட கூட்டங்களில் ஒன்றின் போது இவ் விடயம் கலந்துரையாடப்பட்டது. அவர்கள் குறிப்பிட்ட உபகரணங்களிற்கு இரண்டு ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் உத்தரவாதங்களை வழங்கியிருந்ததால் சலுகையுடன் இரண்டு ஆண்டுகளிற்கான உதிரிப்பாகங்களிற்கான கிரயமும் உள்ளடக்கப்பட்டமை கருத்தில் கொள்ளப்பட்டது. | நுண் மின்சார விநியோக முறைமையை செயற்படுத்தும் இரண்டு ஆண்டுகளிற்கு தேவையான உதிரிப்பாகங்களை வழங்குவதற்கு கேள்விதாரர் கடப்பாடுடையவராக உள்ளதால் வழங்குநரால் இணங்கப்பட்ட காலப்பகுதிக்கு உத்தரவாதத்துடன் சேர்த்து இவ் விடயம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். |